
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in



Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# உளவியல் நோக்கில் விந்தன் கதைமாந்தர்கள்

## *Vinthan Kathaimandhar in Psychological Perspective*

**ப.யாழ்மொழி,** முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை, அ.வீரையாவாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), பூண்டி-613503, தஞ்சாவூர் மாவட்டம். ORCiD:https://orcid.org/0009-0003-1949-0804

**முனைவர் நா.சிவாஜிகபிலன்,** ஆய்வு நெறியாளர், தலைவர் & இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அ.வீரையாவாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), பூண்டி-613503, தஞ்சாவூர் மாவட்டம்.ORCiD: https://orcid.org/0000-0001-8818-6038

***Abstract***

*Vinthan has a special place among the twentieth century literary creators. The writer Vinthan created characters about the marginalized status of the people in his novels. The characters in his novels have psychological elements. In his novel 'Paalum Pavaiyum', this is shown through the behavior of Nagalingam. Vinthan creates mythological elements through the protagonist of the novel 'Paalum Pavayum', Ahalikai, who loves Kanakalingam, even the mythological Ahalikai - Indra. The hero of the novel 'Anbu Alarukirathu', Sambu, feels compassion for the heroine of the story, Lalita, after hearing her sad story. The character of the novel 'Kadhalum Kalyanamum' is created as Mohan immersed in imagination. Vinthan's personal life was full of ups and downs and struggles. Therefore, in Vinthan's novels, we can see characters with subtle psychological elements who are attracted by death. In the novel 'Paalum Pavaiyam', Ahalya and Kanakalingam are shown to have thoughts of death, while in the novel 'Kan Tirakkumaa?' Selvam, Chengamalam and Chitra are shown to have thoughts of death. In this, Ahalya and Chengamalam commit suicide and die. The creator Vinthan has experienced many struggles and poverty in his life. Therefore, psychological elements such as myth, lust, love, compassion, thoughts about death can be seen emerging through the characters he has created.*

***Keywords***: *Psychology, Myth, love, Compassion, Self-pity, vinthan*

**ஆய்வுச் சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் படைப்பாளர்களில் விந்தனுக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. எழுத்தாளர் விந்தன் தனது நாவல்களில் மக்களின் சமூகத்தின் விளிம்பு நிலை மக்கள் குறித்த பாத்திரங்களை உருவாக்கியுள்ளார். அவரது நாவல்களில் வரும் கதாபாத்திரங்கள் பலவும் உளவியல் கூறுகளைக் கொண்டுள்ளன. அவரது 'பாலும் பாவையும்' நாவலின் கதாநாயகன் கனகலிங்கம், 'அன்பு அலறுகிறது' நாவலின் நாயகன் சாம்பு, கதையின் நாயகி லலிதா 'காதலும் கல்யாணமும்' நாவலின் கதாபாத்திரம் மோகன் ஆகிய பாத்திரங்களின் படைப்பினூடாக உளவியல் தன்மை அமைந்திருப்பதனைக் காணலாம். படைப்பாளர் விந்தனின் தனிப்பட்ட வாழ்க்கை ஏற்ற தாழ்வுகள் மற்றும் போராட்டங்களால் நிறைந்தது. எனவே, விந்தனின் நாவல்களில், மரணத்தால் ஈர்க்கப்படும் நுட்பமான உளவியல் கூறுகளைக் கொண்ட கதாபாத்திரங்களை அவரால் படைக்கப்பட்டுள்ளன எனலாம். 'பாலும் பாவையம்' நாவலில், அகல்யாவும் கனகலிங்கமும் 'கண் திறக்குமா?' நாவலில் செல்வம், செங்கமலம் மற்றும் சித்ரா ஆகியோர் மரணத்தைப் பற்றிய எண்ணங்களைக் கொண்டுள்ளனர். இதில், அஹல்யாவும் செங்கமலமும் தற்கொலை செய்து கொண்டு இறக்கின்றனர். படைப்பாளி விந்தன் தனது வாழ்க்கையில் பல போராட்டங்களையும் வறுமையையும் அனுபவித்துள்ளார். எனவே, அவர் உருவாக்கிய பாத்திரங்கள் மிகுதியும் காமம், காதல், இரக்கம், மரணம் பற்றிய எண்ணங்கள் போன்ற உளவியல் கூறுகள் வெளிப்படுவதைக் காண முடிகிறது. அவரது படைப்புகளுள் பாலும் பாவையும் அக்காலத்தில் பெரிதும் பேசப்பட்ட புதினமாகும். விந்தன் புதினங்களுள் இடம்பெற்றுள்ள கதை மாந்தர்களில் உளவியல் கூறுகள் இடம் பெற்றுள்ள விதத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள் :** உளவியல், தொன்மம், காதல் , கருணை , தன்னிரக்கம்,விந்தன்

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையினைக் காட்டும் காலக் கண்ணாடியாகும். மனித வாழ்வியலின் ஒவ்வோர் அங்கத்தையும் பிரதிபலிக்கும் படைப்பிலக்கிய வகைமைகளை வாழ்வியல் இலக்கியம் என்று கூறலாம். சமுகத்தில் தனி மனிதர்கள் கொண்டுள்ள உறவுகள் மற்றும் அவர்களுடைய தொடர்ச்சியான இயக்கம் பற்றி எதார்த்தமாகப் படைத்துக் காட்டுவது படைப்பிலக்கியத்திற்கு மட்டுமே இயன்றது. அவ்வாறான இலக்கியப் படைப்பாளிகளுள் விந்தன் சிறந்து விளங்கியுள்ளார்.

**படைப்பாளி விந்தன்**

வே.கோவிந்தன் எனும் இயற்பெயரைக் கொண்ட விந்தன் செங்கற்பட்டு மாவட்டம், நாவலூரில் பிறந்தவர். இவர் வறுமை காரணமாகக் கல்வி கற்க இயலாத சூழலில் இரவுப்

பள்ளியில் சேர்ந்து படித்துத் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார். ஓவியத்தின் மீது கொண்ட ஆர்வத்தால் சென்னை ஓவியக் கல்லூரியில் சேர்ந்தவர் வறுமை காரணமாக ஓவியக் கல்வியைப் பாதியில் விட்டு தமிழரசு அச்சகத்தில் அச்சு கோர்க்கும் தொழிலாளியாகவும் பின்னர், ஆனந்தவிகடன் அச்சகத்திலும் பணி புரிந்தார். இதழாளர் கல்கி இவரது எழுத்தாற்றலைப் பாராட்டி விந்தன் என்ற பெயரைச் சூட்டினார்.

விந்தன் தனது படைப்புகளில் தாம் வாழ்ந்த வாழ்வினை அனுபவத்தோடு அணுகி, தான் சந்தித்த சமூகச் சிக்கலைக் கதைப் பொருளாக்கி, புதின இலக்கியத்திற்கு உயிரும் உணர்வும் ஊட்டித் தனக்கென ஒர் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டவர் ஆவார். மக்கள் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் படைப்பாளர் விந்தன் புதினங்களில் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்களில் இடம்பெற்றுள்ள உளவியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது. .

**படைப்பாக்கமும் உளவியலும்**

உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு கண்டறிந்த உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு (Psycho Analysis) படைப்பாக்கத்தை ஆராய்வதற்கான மூலதாரமாக விளங்குகின்றது. ஒரு படைப்பிலுள்ள "பாத்திரத்தின் உரையாடல் , சூழல், படைப்பில் வெளிப்பட்ட நிகழ்வுகள், படைப்பாளியின் வாக்குமூலங்கள், தன் வரலாறு போன்றன உளவியல் நோக்கில் ஆராயத்தக்கன'' என்பார் அரங்க. நலங்கிள்ளி. (இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.,ப.11) இக்கூற்று ஒரு படைப்பாளியின் ஆழ்மன வெளிப்பாட்டை ஆராய உதவுவதாகும்.

மனிதனின் அடிமனதில் உறையும் உணர்வுகள் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்குகொள்கின்றன. "இளமைப் பருவ ஏமாற்றங்கள், அதிர்ச்சிகள், உறுத்தல்கள், பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும் அல்லது சிதைவுறும். இத்தகைய அடிமனவுணர்வுகள் கலைஞனுடைய படைப்பில் யாதாகிலும் ஒருவகையில் தம்முடைய முத்திரையைப் பதிக்கக்கூடும்" (பகவதி.கு.(ப.ஆர்), பக்.116-117) எனும் கூற்றிற்கேற்ப விந்தனின் படைப்புகளில் அவரது ஆழ்மன உணர்வுகளும் பிற உளவியல் கூறுகளும் வெளிப்பட்டுள்ளன என்பதனை இக்கட்டுரை ஆராய்கிறது.

**நோக்கு மோகம் *(Voyeurism)***

உளவியல் கோட்பாடுகளில் நோக்கு மோகம் ***(Voyeurism)*** என்பது காட்சிப் பால்மை எனப்படும். நோக்கு மோகம் என்பது நிர்வாண நிலையின் எதிரிடையாகும். பிறரது பால்வினைகளை அல்லது பாலுறுப்புகளைக் கண்டு மகிழ்ச்சி அடைவது நோக்கு மோகம் எனப்படும். இது மசோக்கிஸம் (Masochism) என அழைக்கப்பட்டது. "ஒருவரின்

தோற்றத்தில் மனம் மயங்குவதும் அல்லது எதிர்மறை நோக்கில் தோற்றம் குறித்து உரைப்பதும் நோக்கு மோகத்திரிபாகும்.'' (தி.கு.இரவிச்சந்திரன், ப. 362)

பாலும் பாவையும் புதினத்தில் நாகலிங்கத்தின் தோற்றம் பின்வருமாறு சுட்டப்படுகிறது. "கனகலிங்கத்தின் உள்ளம் வெள்ளைதான். ஆனால், உடலின் நிறம் கருப்பு. அளவுக்கு மீறிய உயரம். ஆனால், ஆஜானுபாகு அல்ல. அவனை அழகன் என்று சொல்ல முடியாது. ஆனால், அவலட்சணம் என்றும் சொல்வதற்கில்லை. ... அவன் உடம்பு எலும்பும் தோலுமாக இருக்கும். அடியில் ஒரு நாலு முழ வேஷ்டி; மேலே ஒரு ஜிப்பா இரண்டும் வெகுநாட்களாகச் சலவைத் தொழிலாளியின் முகத்தைக் காணாதவை போலிருக்கும்" (பாலும் பாவையும், ப.169) என்ற அளவிற்குக் கனகலிங்கத்தின் தோற்றத்தை ஆசிரியர் அறிமுகப்படுத்தியுள்ளார். ஏறக்குறைய விந்தன் தோற்றம் மற்றும் அவரது வாழ்வியல் சூழல் கனகலிங்கத்தின் தோற்றத்தின் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய இயலும். இது நோக்கு மோகத்தின் எதிரிடையாகும்.

**தொன்மம் (Myth) — காமம் (Lust) — காதல் (Love)**

தொன்மம் (myth) என்பது 'பழமை' என்று பொருள்படும். இலக்கியங்களில் புராணம் அல்லது பழமையான கருத்துகளைப் பயன்படுத்துவது அல்லது எடுத்தாள்வது தொன்மங்கள் ஆகும். பழமை என்பது தான் வடமொழியில் புராணம் என்று அழைக்கப்படுகிறது. தொன்மங்களைப் பற்றி ஆராயும் துறை தொன்மவியல் ஆகும்.

**அகலிகை**

இந்தியப் புராணங்களில் அகலிகை என்ற பெயர் பரவலாக அறியப் பயன்பட்டதாகும். ''அஹல்யா என்பதற்கு உழப்படாத நிலம் என்னும் பொருள் . தாகூர் இவளை நித்தியகன்னி என்பார். பத்மபுராணம், ஸ்காந்தம் போன்ற பிற்காலப் புராணங்கள் அகலிகையைப் பதிவிரதை என்பர்.'' (அஹல்யா, சிறு பிரசுரம், ப.11) ''அகல்யா இந்திரனிடம் தன் உண்மையான உடலை இழக்கவில்லை; மாய உடம்பையே இழந்தாள் எனப் பத்மபுராணம் கூறுகிறது.'' (அஹல்யா, சிறு பிரசுரம், ப.11)

கம்பன்,அகலிகையை, ''மாசறு கற்பின் மிக்க அணங்கு'' என்கிறார். (கம்பராமாயணம், பாலகாண்டம், அகலிகைப் படலம், பா. 479:4 ) ஏனெனில் , இராமன் கவுதமரிடம், ' நெஞ்சில் பிழையில்லாத இவளை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்றும் அகலிகைக்கு விமோசனம் கொடுத்து அவளை 'அன்னையே' என அழைப்பதால் அகலிகையின் கற்புத் திறத்தை அறியலாம். இப்புராணக் கதையானது இந்தியா முழுமைக்குமான புரணங்கள் சிலவற்றில் எடுத்தாளப்பட்டுள்ள தொன்மச் செய்தியாகும். அகலிகையின் வாழ்க்கைக் களங்கமுற அடிப்படைக் காரணம் காமமாகும்.

காமம் என்பது பாலியல் ஆசையால் தோன்றும் உணர்வு ஆகும். இது இருவருக்கிடையில் ஏற்படும் பாலின்ப ஈர்ப்பைக் குறிக்கிறது எனலாம்.

ஆணும், பெண்ணும் பாலியல் உணர்வில் ஈர்ப்புத்தன்மை உடையவர்களாகப் படைக்கப்பட்டிருப்பது உலகியல் இயற்கை. மனித வாழ்வில் காதலும் காமமும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாகும். காதல் வெளிப்படும் போது காமம் வெளிப்படாது. இரண்டுமே வெவ்வேறு நேரங்களில் தனித்தியங்கும் இயல்புடையன . காமத்தில் காதல் இல்லை. காதலும், காமமும் வேறு வேறு என்றாலும், காதல் என்பது உடல் உறவின் போது 'காமம்' என்று தான் அழைக்கப்பெறுகிறது. காதலே நோயும் மருத்துவமும் " 7 எனும் உளவியல் கூற்றுகள் இங்கு இணைத்தறியத்தக்கது ஆகும். (டி.நாராயணரெட்டி, ப.74 )

காமம் என்பது உடலின் ஒரு பகுதியில் தோன்றி மறைவதில்லை. உடலின் சதை, இரத்தம், நரம்பு போன்றனவற்றை ஒருசேர இயக்கும் தன்மையதாகும்.

**கனகலிங்கம் - அகல்யா**

பாலும் பாவையும் புதினத்தின் கதைத்தலைவன் கனகலிங்கம் ஆவான். ஆசிரியர் விந்தன், கனகலிங்கத்தின் மேல் அன்பை ஏற்படுத்தும் வகையில் அறிமுகப்படுத்துகிறார். கனகலிங்கம் புத்தக விற்பனைக்காகக் கலைஞானபுரம் சென்ற போது அங்கு விடுதி ஒன்றில் தங்கினான். அப்போது, இந்திரன் என்பவனால் காதலித்துக் கைவிடப்பட்ட அகல்யா என்கிற பெண் ஒருவர் கனகலிங்கத்திடம் குமுறி அழுது, தன் வேதனையைக் கொட்டி அவன் இதயத்தில் இடம் பெற முயல்கிறாள்.

கனகலிங்கம் அப்போது அகல்யாவிடம் காதலைப் பற்றிய தன்னுடைய கருத்தாகப் பின்வருமாறு கூறுகிறான். "என்னைக் கேட்டால் காதல் என்று இந்த உலகத்தில் இல்லவேயில்லை என்று சொல்வேன். 'காமம்' என்று சொல்வதற்குச் சிலர் அந்த நாளில் கூச்சப்பட்டு அதற்குக் 'காதல்' என்று அழகாய்ப் பெயர் வைத்திருக்கிறார்கள்'' (பாலும் பாவையும், ப.181) என்று கூறுகிறான். இக்கூற்றில் காமம், காதல் என்பதற்கான விளக்கங்களை விந்தன் கூற்றாகவே அறியப்படுகிறது.

**அகல்யா — இந்திரன்**

பாலும் பாவையும் நாவலில் வரும் அகல்யா இந்திரன் தன்னைக் காதலித்து ஏமாற்றியது குறித்துக் கனகலிங்கத்திடம் சொல்லும்போது, "நம்பி வந்தவளைக் கைவிடுவது இதுதான் இன்றைய உலகம் தெரிந்தவனின் லட்சணம். அதாவது, தான் பிறருக்கு உபயோகமாயிருக்கக்கூடாது. பிறர் தனக்கு உபயோகமாயிருக்க வேண்டும்' என்று எவன் நினைக்கிறானோ, அவன் தான் இந்தக் காலத்தில் புத்திசாலி என்று போற்றப்படுகிறான். மேதை

என்று மதிக்கப்படுகிறான். அவனால்தான் இந்த உலகத்தில் விரும்பியபடியெல்லாம் வாழவும் முடிகிறது'' (பாலும் பாவையும்,ப.185) என்ற தன்னுடைய கருத்தையும், வாழ்வியலின் உண்மை நிலையையும் எடுத்துரைக்கிறாள்.

மேலும், அகல்யாவும் கனகலிங்கமும் உரையாடுகிறபோது ''வாழ்க்கையில் காதலை எதிர்பார்த்து ஏமாந்த சில சோணாகிரிகளின் கட்டுக் கதைதான் காதல்'' என்கிறான். மேலும், "அது ஓர் இனிய கனவு. அற்புதக் கற்பனை,கதைகளுக்கும் காவியங்களுக்கும் உயிர்நாடி போன்றது. ஆனால், படித்து அனுபவிப்பதோடு அதை நிறுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கைக்கு அது ஒத்து வராது'' (பாலும் பாவையும், பக்.181-182) என்ற காதல் பற்றிய தன்னுடைய கருத்தைக் கூறுகிறான். கனகலிங்கம் ஏற்கனவே காதலில் தோல்வியுற்ற அகல்யாவுக்குக் காதலின் பரிமாணத்தை உணர்த்துகிறான்.

எனவே, புராணக் காலத்து, அகலிகை - இந்திரன் வாழ்க்கையை மையமிட்ட பாத்திரமாக அதன் சாயலில் படைப்பாளி விந்தன், அகல்யா-இந்திரனைப் படைத்துள்ளார் எனலாம்.

காதல் நோக்குநிலை (Romantic orientation) என்பது காம அடிப்படையிலான பாசமான நோக்குநிலை என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு நபர் காதல் உறவை அல்லது காதலில் விழக்கூடிய பாலினத்தைக் குறிக்கிறது. இது பாலியல் நோக்குநிலை என்ற சொல்லுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த உளவியலின் கோட்பாடுதான் யதார்த்தமான நிகழ்வாகப் பாலும் பாவையும் நாவலில் இடம்பெற்றுள்ளது.

கனகலிங்கம் மீது காதல் கொண்ட அகல்யா நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று சொன்னதைக் கேட்டவுடன், கனகலிங்கம் "நாசமாய்ப் போச்சு, காதலுக்குக் காசு அல்லவா நிறைய வேண்டியிருக்கிறது'' (பாலும் பாவையும்,ப.187) என்று சொல்லி அவளுக்குத் தன்னாலான உதவிகள் செய்து அவளது காதலை ஏற்க மறுத்து விடுகிறான். இக்கூற்றில் காதல் குறித்த தெளிவான சிந்தனையை விந்தன் பதிவு செய்துள்ளார் எனலாம்.

## இரக்கம் (Pity)

இரக்கம் (Pity) என்பது வேறொருவர் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் போது அவர்பால் காட்டும் உணர்வாகும். இரக்க உணர்வு இல்லாத வேளைகளிலும் தன் ஆளுமையினைக் காட்ட இவ்வுணர்வினை உபயோகப்படுத்துவர். உயிர்கள் இழப்போ, அல்லது பொருள் இழப்போ நேருகையில் இரங்கல் தெரிவிப்பது அவர்களின் இரக்க உணர்வினை வெளிப்படுத்தும் முறையாகும்

அன்பு அலறுகிறது நாவலின் நாயகன் சாம்பு ஆவான். கோயிலுக்குச் சென்றபோது ஏற்பட்ட சண்டையில் ஒருவன் வீசிய கல் சாம்புவின் நெற்றியில் பட்டு இரத்தம் ஆறாகப் பெருகி ஓடியது. இதைக் கண்டு அவனது முதலாளி அம்மா லலிதா வருந்துகிறாள். லலிதா சாம்புவைப் பார்த்து 'என்னாலல்லவா உனக்கு இந்தக் கஷ்டம்' என்றவுடன் அதற்கு சாம்பு "உங்களுடைய கஷ்டத்தைப் பார்க்கும்போது என்னுடைய கஷ்டம் எனக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை, அம்மா" (அன்பு அலறுகிறது, ப.377) என்று லலிதாவின் துன்பத்தைக்கண்டு இரக்கப்படும் பாத்திரமாகச் சாம்பு படைக்கப்பட்டுள்ளான். மேலும், லலிதாவின் துயரக் கதையைக் கேட்டு "அட கடவுளே! இதற்குத்தான் ஐயா ,உங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்தார்" (அன்பு அலறுகிறது, ப.381) என்கிறான். பின்னர், லலிதா தன் கணவர் குறித்துச் சொன்னதைக் கேட்டு, "தூ! போயும் போயும் இந்த மானங்கெட்ட மனிதருக்கு நீங்கள் மாலையிட்டீர்களே, அம்மா! " (அன்பு அலறுகிறது, ப.381) என்று கூறுவதன் மூலம் லலிதாவின் மீது இரக்கம் கொண்டவனாகச் சாம்புவை ஆசிரியர் படைத்துள்ளார்.

**பகற்கனவு (Fantacy)**

உளவியல் கூறுகளுள் கற்பனையில் சில செயல்பாடுகளை மேற்கொள்ளும் பகற்கனவு **(Fantacy)** என்பது கனவின் ஒரு வகையாகும். உள்ளமானது, "சமூகச் சூழல்களில் சிலவற்றை ஏற்க இயலாத நிலையில் தன்னிச்சையாக ஒரு கற்பனையில் ஈடுபடுகிறது. உள்ளம் வாழ்வை விரும்புமாறு படைத்துக்கொண்டு மனம் தன்போக்கில் மகிழ்கிறது. இதனைப் பகற்கனவு என்று உளவியல் கூறும்." (டி.போவாஸ்,சு.வரதராஜுலு, ப.45)

மனிதன் உண்மை வாழ்க்கையில் பெற இயலாதவற்றைக் கற்பனை செய்து மனநிறைவு கொள்ளுதலே உள்ளப்போக்கின் அடிப்படை ஆகும். இதைத் தற்காப்பு இயங்குமுறைகள் (Defence Machanism) என்பர். இப்பகற்கனவு என்பது உறக்கத்தில் வரும் கனவோடும் கற்பனையோடும் தொடர்புடையது. மேலும், "தூக்கத்தில் நிகழ்வது கனவாகவும், விழிப்பில் நிகழ்வது பகற்கனவாகவும் உள்ளது. இரண்டிற்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை" என்பர் அறிஞர். (டி.போவாஸ்,சு.வரதராஜுலு, ப.45)

**காதலும் கல்யாணமும் - மோகன்**

காதலும் கல்யாணமும் புதினத்தில் இடம்பெறும் கதைத் தலைவன் மோகனை, முதன்மைப் பாத்திரமாகப் படைத்துள்ளார் ஆசிரியர். அரசு நிறுவனங்களில் பணிபுரியும் மோகனுக்கு வாரத்தில் இரண்டு நாள்கள் விடுமுறை. அந்த விடுமுறையில் காதலில் ஈடுபடும் இளைஞர்கள் கனவு காண்பது போல மோகனும் கனவு காண்கிறான். மோகன் கண்ட கனவு

பலிக்கிறது. அதுவும் பகலில் கண்ட கனவு பலிக்கும் என்ற வகையில் ஆசிரியர் மோகனைப் படைத்துள்ளார்.

**கனவில் மகிழ்தல்**

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை மோகனுக்கு ஓர் இனிய கனவு தோன்றுகிறது. இந்தக் கனவிலே மோகனுடைய இலட்சிய மனைவி தோன்றுகிறாள். அவளை மெல்ல தொட்டுச் சிரிக்கிறான். அந்தச் சிரிப்பில் இன்பம் கண்டு எழுந்து உட்காருகிறான். பின் அவளுடைய கைகளைப் பற்றியபோது, அவள் "என்னைத் தொடாதீர்கள்" (காதலும் கல்யாணமும், ப.577) என்று விலகி நிற்பது போல் கனவு காண்கிறான்.

மேலும், இச்சமயத்தில் தன்னுடைய நண்பன் வீட்டிற்கு வந்த மணியிடம் இக்கனவு பற்றிக் கூறுகிறான். வழக்கம்போல் மணியின் தாய் காபி கொடுக்கும்போது மோகன் இந்தக் காபியை, "காலை நேரத்தில், குளித்து நனைந்த கூந்தல் கழுத்திலே விழுந்து அந்தக் கூந்தலுக்கு நடுவே கிள்ளி வைத்த ஒற்றை ரோஜா, முதல் நாள் இரவுக்குப் பிறகு வெளிறிப்போன தன் இதழ்களை நினைவூட்ட அந்தக் கனவுக் கன்னி கொண்டு வந்து கொடுத்திருந்தால் எப்படி இருக்கும்" (காதலும் கல்யாணமும், ப.581) என்று கற்பனையோடு இருக்கிறான். இக்கூற்றின் மூலம் தன்னுடைய வருங்கால இலட்சிய மனைவியை நினைத்து மகிழும் பாத்திரமாகத் திகழ்கிறான்.

**கலைஞன் - அகமுகன் (Introvert),**

கலைகள் மனிதர்களை உணர்வுநிலைக்கு ஆட்படுத்துவதாகும். அவ்வாறான கலைகளை உருவாக்கும் கலைஞன் தனக்குள்ளாகவே ஒன்றை உருவாக்கி , அதைச் சமுதாயத்தில் வெற்றி பெற வைக்கிறான். அவ்வாறான, "கலைஞன் என்பவன் ஓர் அகமுகன் (Introvert) ஆவான். அவன் மதிப்பையும், அதிகாரத்தையும் செல்வத்தையும் புகழையும் பெற ஆசைப்படுகிறான். ஆனால், இந்தத் திருப்திகளை அடையும் வழிவகை அவனிடம் இல்லை. "அதன் விளைவாகத் திருப்தியடையாத அவன் மெய்ம்மையிலிருந்து விலகிச் செல்கிறான். அவன் தன் விருப்பம் சார்ந்த தற்புனைவு வாழ்க்கை உருவாக்கங்களுக்குத் தன் ஆர்வமெல்லாவற்றையும் இட்டுச்செல்கிறான். அங்கிருந்து அப்பாதை அவனை நரம்புப் பிணிக்கு இட்டுச் செல்லக் கூடும்" என்பார் உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்ட். (அந்தனி ஸ்டோர்.சி. (மூ.ஆர்.), மணி (மொ.ஆர்.), ப.147 ) எனும் உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டின் கோட்பாட்டின்படி படைப்பாளர்கள் பலரும் வாழ்ந்துள்ளதைப் போலவே விந்தனும் வாழ்ந்துள்ளார் என்பதை அவரது படைப்புகளின் வழி அறியமுடிகிறது.

மு.வ.வின் புதினங்களில் இடம்பெற்றுள்ள. "ஓடிப்போதல் அல்லது காணாமல் போதல் மு.வரதராசனார் சித்தப்பா காணாமல் போனதன் ஏக்கமாகும் என்பர்." (சி.இ.மறைமலை,

ப.66) இதைப் போலவே, விந்தனின் வாழ்வியல் பாதிப்புகள் அவரது புதினங்களில் இயல்பாகவே அமைந்துள்ளன. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தன்னை அழித்துக் கொள்ளும் சாவுணர்ச்சி வெளிப்படலாம்.

### சாவுணர்ச்சிகள் (Death Instincts)

சிக்மண்ட் பிராய்டு, குற்ற உணர்வுடைய உள்ளத்தில் பிறழ் நடத்தைகள் வெளிப்படுவதைக் கண்டறிந்தார். குற்ற உணர்வுகளில் தற்கொலை எண்ணம் இதற்குச் சரியான சான்றாகும். நாம் இறந்து விடுவோமோ என்ற குற்ற உணர்வும் இதற்கு அடித்தளமாகும். அகம் (Ego) முதலில் தன்னைத் தண்டிக்க வேண்டும் என்று விரும்புகிறது. இதனைப் “புறச்சார்பு வதைத்துறு மோகம், அகச்சார்பு வதைத்துறு மோகம் என இருவகைப்படுத்துவர் . வதைத்துறு நிலையின் உச்சம் தற்கொலை முயற்சி என்னும் வதைவுறுச் செயலாகும்.” (தி.கு.இரவிச்சந்திரன், ப.139 )

மனித வாழ்வில் சாவு என்பது தவிர்க்க முடியாமல் இணைந்த ஒன்று. சாவுணர்ச்சி சிலருக்கு அச்சமூட்டக் கூடியதாக விளங்கும். சிலருக்கோ ஈர்ப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்கும். ஒரு மனிதன் மரணத்தின்பால் ஈர்க்கப்படுவதற்கு அவன் வாழும் சூழல், எதிர்கொள்ளும் நிகழ்வுகள், இயல்பான உளநிலை ஆகியவை முக்கியக் காரணிகளாய் அமைகின்றன.

விந்தனின் வாழ்வு, ஏற்றத் தாழ்வுகளாலும் போராட்டங்களாலும் நிரம்பியது. வறுமையான சூழலில் வளர்ந்த அவர், உணவகத் தொழில், இதழியற் பணி, திரைத்துறைப் பணி, பதிப்புப் பணி எனப் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் பெருமளவு தோல்விகளையும் ஏமாற்றங்களையும் சந்தித்து மறைந்து போனவர். விந்தன் நாவல்களில் நுணுக்கமான உளவியல் கூறுகளும் மாந்தர்கள் சாவின் மீது ஈர்ப்பு கொண்டவர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது. தன் மனத்தில் தோன்றிய சாவு குறித்த தொடர்ச்சியான எண்ணங்களைத் தன்னுடைய மாந்தர்களின் வழியே அவர் வெளிப்படுத்துகிறார்.

விந்தன் 'புத்தகப்பூங்கா' எனும் பதிப்பகத்தைத் தொடங்கியபோது வெளியிட்ட முதல் நூல் இளங்கோவன் என்பவர் எழுதிய 'சாவே வா' என்பதாகும். “ஏழை எளியவர்கள் வாழ்விக்கையிலிருந்து என்னுடைய நாவல் பிறக்கிறது” என்று அவர் குறிப்பிடுகிறார். (மு.பரமசிவம், ப.91)

அவருடைய மாந்தர்கள் மரணத்தின் மேல் கொண்டுள்ள ஈர்ப்பு அவர் படைத்துள்ள பாத்திரங்களின் எண்ணங்கள், இயல்பான உரையாடல்கள், நிகழ்வுகள் ஆகியவற்றின் வழி வெளிப்படுகிறது.

**விந்தனின் கதை மாந்தர்களும் சாவுணர்ச்சியும்**

மனிதனுடைய மனத்தில் உயிர்வாழ்தல் , சாதல் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று கொண்டிருப்பவை ஆகும். பாலும் பாவையும் நாவலில் வரும் அகல்யா, கனகலிங்கம், கண் திறக்குமா? நாவலில் வரும் கதை மாந்தர்களான செல்வம், செங்கமலம், சித்ரா ஆகியோர் இதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன. இதில் அகல்யாவும் செங்கமலமும் தற்கொலை செய்து இறந்து போகிறவர்கள். இப்பாத்திரங்களின் மனத்தில் தோன்றும் சாவுணர்ச்சி எண்ணங்களுக்குப் பொருளாதாரம் காரணமாக அமைகிறது.

கண் திறக்குமா? நாவலில் , பொருள் சம்பாதிப்பதை வாழ்வின் நோக்கமாகக் கொண்ட மனிதச் சமூகத்தின் சூழலுக்கேற்ப வாழ இயலாத செல்வம், "இந்த அழகான உலகத்திலிருந்து என்னைப் போன்றவர்களுக்கு விடுதலையளிக்கும் மரணம் நீடூழி வாழ்க" ( கண் திறக்குமா?, ப.88. ) என்று கூறுகிறான். செங்கமலம், தன்னை ஏமாற்றிய சிவகுமாரனுடன் சேர்ந்து வாழ முடியாத சூழலில் அவன் இறந்ததை அறிந்து கிணற்றில் விழுந்து இறந்து போகிறாள். தான் விரும்பிய வாழ்வை அடைய முடியாததால் உண்டான ஏமாற்றத்தின் முடிவு அவளை இறக்கச் செய்கிறது.

உலக வாழ்வு குறித்துத் தெளிவாகச் சிந்திக்கும் பாலும் பாவையும் புதினத்தின் நாயகன் கனகலிங்கம், வேலையிழந்த நிலையில் வாழ்வின் மீது வெறுப்பு கொள்கிறான். "பிழைக்காவிட்டால் செத்துத்தானே போகப் போகிறேன்? போனாற் போகிறேன்." ( பாலும் பாவையும், ப.188. ) என்று கூறுவதைக் காணலாம்.

மேலும், அப்புதினத்தில் இடம்பெறும் பணக்கார வீட்டுப் பெண்ணான அகல்யா, தன்னுடைய காதலன் இந்திரனால் வஞ்சிக்கப்பட்டுப் பின் கனகலிங்கத்தை நாடி, அவனையும் இழந்த நிலையில் சாவை நாடுகிறாள். "என்னைப் போல வழி தவறியவர்களுக்கு சாவில்தான் முடிவு இருக்கிறது?" (பாலும் பாவையும், பக்.188.) என்று அவள் கூறுவது சாவு விழைவு (Death Wish) எண்ணத்தை வெளிப்படுத்துகின்றன. சமூகத்தில் நிகழும் சிக்கல்கள் தனிமனிதனின் உளவியலைப் பாதிக்கின்றன. இதிலிருந்து விடுபட மனிதனுக்குச் சில நேரங்களில் சாவு அவசியமாகத் தோன்றுகிறது.

இவ்வாறாக ,விந்தன் புதினங்களில் சாவு குறித்த சிந்தனைகள் பல பாத்திரங்களின் வழியாக அவர்களது வாழ்வியல் சூழலும் அதற்கான காரணங்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

படைப்பாளி விந்தன் சமூகத்தில் ஆழப் புரையோடியுள்ள சீர்கேடுகளை நுட்பமாக உணர்ந்தவர் மட்டுமல்ல அனுபவித்தவரும் ஆவார். அவர், மக்களின் வாழ்வியல் நிலை, தொழிலாளர் வறுமை, காதலும் பொருளாதாரமும் ஒன்றற்கொன்று தொடர்புடையன. பொருளாதாரம் தான் காதலை முடிவு செய்கிறது என்பதைத் தம் புதினங்களில் பல் இடங்களில் விந்தன் பதிவு செய்துள்ளார். சமூகச் சிக்கல்களை உணர்ந்து எழுதிய படைப்புகளின் ஊடாக எழுத்தாளர் விந்தன் வாழ்ந்த வாழ்வினைத் தனியே பிரித்து விட்டு ஆராய இயலாது. அவ்வகையில் விந்தன் நாவல்களில் காணலாகும் உளவியல் கூறுகளுள் ஒன்றான தொன்மம், காமம், காதல், இரக்கம், சாவு குறித்த எண்ணங்கள் போன்றன விந்தனின் வாழ்வின் அனுபவங்களைத் தான் படைத்த கதை மாந்தர்களின் வழியாக வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது.

*Refrences:*


1. *Aranga.Nalangilli, Ilakkiyamum Ulaviyalum, 184, Broadway, Pari Nilayam, Chennai-600001*
2. *Ahalya, Siru Veliyeedu, Thiruchy -1942*
3. *Antony Store., C.Mani (Trns.Au.) Freud, Surukkamaana Arimugam , Adaiyalam Veliyeedu, 1205/1, Karuppur Road, Puthanatham-613310*
4. *Bhagavathy.ku.,(Editor)., Araaychi Anugumuraigal, Ulaga Thamizhaaraaychi Niruvanam, Chennai-600113, First Edition-March-1989*
5. *Boas. G.T., Su. Varadarajulu (Trns.Au.) Pothu Ulaviyal - Volume 1, Thamizh Nadu Paada Nool Niruvanam, Chennai. Edition -1972,*
6. *Iravichandran.Thi.Ku., Sigmund Freud's Ulap Paguppaayvum Ariviyal, Alaigal Veliyeettagam, Chennai-600024*
7. *Kambaramayanam, Kamban Kazhagam, 795, Annanagar, Chennai-600040*
8. *Maraimalai.,C.E., Ilakkiyamum Ulaviyalum, Manivasagar Pathippagam, 55, Lingachetti theru, Chennai- 600001, First Edition, December-1991*
9. *Narayana Reddy.D, Uyir, Vikatan Prasuram, 757, Anna Salai, Chennai-600002. First Edition- June 2006*

10. *Paramasivam.M. Vinthan Indhiya Ilakkiya Chirpigal, Sahitya Academy, New Delhi. -2001*
11. *Vinthan, Kan Thirakkumaa?, Arundhati Nilayam, Chennai, 2000*
12. *Vinthan, Paalum Paavaiyum, Rajarajan Publishing House, Chennai, 2000*
13. *Vinthan Stories, Author Vinthan, Kalaignan Publishing House, Chennai. - 2000*
14. *Vinthan kathaikal, Anbu Alrukirathu, Author, Vinthan, Kalaignan Publishing House, Chennai - 2000*
15. *Vinthan kathaikal, kaathalum kalyaanamum, Author, Vinthan., Kalaignan Publishing House, Chennai. - 2000*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research
அரண்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com